பொறியாளர், நீ.ஆ.அ. & தலைமை
பொ.ப.து.
அலுவலகம்
10 JUN 2020
சென்னை–5

8576/6

09/6/2020

### சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி சி.ஆண்டாள், க/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு கோ.இராமமூர்த்தி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (பி1) துறை**

அரசாணை (3ப) எண். 29

29990

நாள் : 26.05.2020
சார்வரி, வைகாசி : 13
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை. சென்னை கடிதம் எண்.நி3(3)/10380/2019, நாள் 04.09.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள் 23.01.2020.

---

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த கட்டட (கட்டுமானம்) உபகோட்டம், இராணிப்பேட்டை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு கோ.இராமமூர்த்தி கடந்த 27.06.2008 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மனைவியான திருமதி சி.ஆண்டாள் என்பவர் 18.08.2008 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கருணை அடிப்படையில் கல்வித் தகுதிக்கேற்ப பணி வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தனியருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, வேலூர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகத்தில் 24.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் ஏப்ரல் 1992–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியர் பிறந்த தேதி 13.10.1975 என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 24.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

E1C

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திருமதி சி.ஆண்டாள், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான **24.08.2018** முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா. எண். 3177/க்யூ2/2020-1, நாள். 12.05.2020 (ம) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அ.சா. எண்.11914/ஜி2/2020, நாள்19.05.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை, சென்னை-5.
திருமதி சி.ஆண்டாள், இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
சென்னை மண்டலம் பொதுப்பணித்துறை, சென்னை-5 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை -18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை / பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை,
சென்னை- 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

30.05.2020

பிரிவு அலுவலர்

30.5.20